பதவிய பிரதேச சபையி 2022

---------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பதவிய பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று/ தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் பதவிய பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமத்திற்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்.

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2021 ஆம் ஆண்டில் ரூபா.484,859 செலவில் நிர்மானிக்கப்பட்ட நெற்களஞ்சிய குட்டிக்கல் வீதி இரண்டு தடவைகள் கணக்கிடப்பட்டிருந்தது. | -மேற்படி- | உரிய பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் கடை வாடகை ரூபா.22,000 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்வதாக. | உரிய பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் குழாய் நீர் விற்பனை ரூபா.12,246 ஆல் கூட்டிக் காட்டப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | மீளாய்வாண்டில் உள்ளுராட்சி திணைக்களத்தினால் நன்கொடையாக பெறப்பட்ட ரூபா.79,800 பெறுமதியான கண்ணாடி அலுமாரிகள் சொத்தாக கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் அது செலவினமாக கணக்கீடு செய்யபட்டிருந்தது. | -மேற்படி- | சொத்துக்கள் உரிய முறையில் அடையாளம் காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | ''கிராமத்துடன் கலந்துரையாடல்'' திட்டத்தின் கீழ் ரூபா.6,970,589 பெறுமதியில் நிர்மாணிக்கப்பட்ட 32 சிறுகடைகளின் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஊ) | மீளாய்வாண்டில் மூலதன மாற்றல்கள் வருமானமாக அடையாளப்படுத்தப் பட்டமையினால் ரூபா.419,293 ஆல் கூட்டி காட்டப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (எ) | 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான உரிமைப் பங்கு கூற்றில் 2022 சனவரி 01 பற்றாக்குறை அல்லது மிகையாக சேர்க்கபடாத ரூபா.24,362,601 மூலதன மாற்றல்களின் ஆரம்ப மீதி சேர்க்கப்படாமையினால் இறுதி மீதி அப்பெறுமதியால் குறைத்துக்காட்டப்பட்டுள்ளது. | -மேற்படி- | -மேற்படி- |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திரட்டு நிதியானது 2022 சனவரி 01 ஆந் திகதிய ஆரம்ப மீதி ரூபா.367,860,684 ஆக காணப்பட்டது இருப்பினும், உரிமைப் பங்கு மாற்றங்கள் கூற்றில் அது ரூபா.352,543,697 ஆக காணப்பட்டது. ஆகவே ரூபா.15,316,987 வேறுபாடு காணப்பட்டது. | ஏற்றுக்கொள்கின்றேன். | பட்டியல்கள் தொடர்புடைய பதிவேடுகளுடன் இணக்கப்பட வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் காசுப்பாச்சல் கூற்றில் இணக்கம் செய்யப்பட்ட ரூபா.3,504,730 பொறுமதியான பொது நாட்குறிப்பு பதிவுகள் தொடர்பான ஆவணங்கள் சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றேன். | உறுதிப்படுத்தல்கள் சமர்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2022 திசெம்பர் 31 இல் உரிமைப் பங்கு மாற்றங்கள் கூற்றில் உள்ள முன்னைய ஆண்டின் ஏற்பட்ட தவறான பெறுமதி ரூபா.13,329,875 இற்கான ஆதாரங்கள். | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | ரூபா.228,670,000 பெறுமதியான காணி தொடர்பான, காணி பரிமாற்றல் ஆவணங்கள், காணி நில அளவை தொடர்பான தகவல்கள் மற்றும் காணி தொடர்பான சட்ட ஆவணங்கள் ஆகியன சமர்பிக்கப்பாமையினால் அவை கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |

**1.7 இணங்காமைகள்**

**1.7.1. சட்டம், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகான சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | சட்டம், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2015 யூலை 10 ஆம் திகதிய 02/2015 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கை. | பயன்படுத்த முடியாதுள்ள 06 வாகனங்கள் தொடர்பாக தேவையாக நடவடிக்ககை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இயந்திர பொறியியலாளர் வருகை தந்தவுடன் இதை செய்கின்றேன். | விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | NCP/LG/IF/04/04/2020 ஆம் இலக்க 2020 ஆகஸ்ட் 22 ஆம் இலக்க வட மத்திய மாகாண உள்ளுராச்சி ஆணையாளரின் கடிதம். | 2022 ஆம் ஆண்டில் J.C.B இயந்திரம் வாடகைக்கு விடப்பட்டமை தொடர்பான கட்டனம் ரூபா.221,330 அறவிடப்படாதுள்ளது. | அறவிடுவதற்கான நடவடிக்கை மேற்கொண்டுள்ளேன். | -மேற்படி- |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 5,023,369 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 1,596,089 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலங்கள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| (i) | வீதவரியும் வரியும் | 1,655,600 | 1,495,450 | 1,533,900 | 605,000 | 1,421,400 | 1,752,270 | 1,108,820 | 643,450 |
| (ii) | வாடகை | 6,391,400 | 3,899,085 | 3,465,685 | 448,600 | 5,803,000 | 2,338,632 | 2,322,432 | 15,200 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 3,367,500 | 1,864,352 | 1,692,960 | 214,642 | 2,804,720 | 1,719,462 | 1,676,462 | 43,250 |
| (iv) | ஏனைய வருமானம் | 8,742,500 | 7,822,602 | 7,697,834 | 1,377,495 | 7,462,300 | 6,111,690 | 6,013,270 | 1,252,727 |
| | **மொத்தம்** | **20,157,000** | **15,081,489** | **14,390,379** | **2,645,737** | **17,491,420** | **11,922,054** | **11,120,984** | **1,954,627** |

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புகள் கீழ் வருமாறு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **வீதவரியும் வரியும்** | | |
| (i) | 2022 ஆம் ஆண்டில் பிரதேச சபை அதிகார எல்லைக்கு உட்பட்ட அபிவிருத்தி அடைந்த பிரதேசங்களை அடையாளப்படுத்தி வர்தமானியில் அறிவித்து வீதவரியினை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | சொத்துகளை கணக்கெடுப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | பிரதேச சபை அதிகார எல்லைக்குள் காணப்படுகின்ற கழிவு சேகரிப்பு முகவர் நிலையங்கள் தொடர்பான ஆய்வு மேற்கொண்டு அவர்களுடன் ஒப்பந்தங்களை ஏற்படுத்தி கட்டனங்களை அறவிடுவதற்கு | ஒப்பந்தங்களை ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | ஆய்வு மேற்கொண்டு கட்டனங்களை சேகரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |
| (iii) | 2022 திசெம்பர் 31 இல் நிலுவையாகவுள்ள தொழிற் துறை வரி ரூபா.115,000 மற்றும் வர்த்தக வரி ரூபா.490,070 சேகரிக்கப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | புதிய மதிப்பீடுகளை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளேன். | விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| **(ஆ)** | **வாடகை** | | |
| | 23 நடமாடும் கடைகளின் மூலமாக 01 தொடக்கம் 06 மாதகாலமாக அறவிடப்பட வேண்டிய நிலுவைகள் ரூபா.37,000 அறவிடப்பட வேண்டியுள்ளது. | அறவிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| **(இ)** | **அனுமதிப்பத்திரக் கட்டணம்** | | |
| (i) | 2022 ஆண்டில் பிரதேச சபை அதிகார எல்லைக்குள் வர்த்தக வரிகள், தொழிற் துறை வரிகள் மற்றும் வியாபார அனுமதிப்பத்திரங்கள் தொடர்பாக ஆய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை அத்துடன் முன்னைய ஆண்டின் நிலுவையாகவுள்ள ரூபா.900,100 கட்டணங்களை அறவிடுவதற்கான நடவடிக்கையானது மீளாய்வாண்டின் இறுதிவரை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. மற்றும் ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா.61,850 ஆகும். | மதிப்பீடுகளை மேற்கொண்டு நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளேன். | -மேற்படி- |
| (ii) | 2021 மற்றும் 2022 ஆண்டில் பிரதேச சபை அதிகார எல்லைக்குள் காணப்படுகின்ற விளம்பர பலகைகள் தொடர்பாக ஆய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை அத்துடன் 109 விளம்பர பலகைகள் தொடர்பாக நிலுவையாகவுள்ள ரூபா.813,050 கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வருமான மதிப்பீட்டாளர் மதிப்பீட்டு அறிக்கையிணை அலுவலக பொறுப்பதிகாரியிடம் ஒப்படைக்கவில்லை. | பொறுப்புவாய்ந்த அதிகாரிக்கு தெரிவிக்கப்பட வேண்டும். |
| **(ஈ)** | **நீதிமன்ற கட்டணம் மற்றும் முத்திரை வரி** | | |
| | 2022 ஆண்டிற்கான நிலுவை நீதிமன்ற தண்டப்பணம் ரூபா.789,495 மற்றும் முத்திரை கட்டணம் ரூபா.588,000 மாகாணசபையின் பிரதம செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் அறவிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளேன் | அறவிடுவதற்கு விரைவாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### சட்டத்தினால் குறித்துரைக்கப்பட்டுள்ள செயற்பாடுகளின் செயற்றிறன்

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவு என்பவற்றின் கீழ் பொது சுகாதாரம், பொதுப்பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபையினால் உள்ளூராட்சி திணைக்களத்திடமிருந்து பெறப்பட வேண்டியதும் மற்றும் பிரதேச சபையினால் ஒப்பந்தகாரர்களுக்கு செலுத்த வேண்டியதுமான தொகை ரூபா.11,181,833 01 தொடக்கம் 07 வருடகாலம் நிலுவையாக காணப்பட்ட போதிலும் அது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சீர்செய்தற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | நிலுவையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | ரூபா.2,685,900 பெறுமதியான ஐம்பத்து நான்கு (54) வீதி விளக்குகள் மற்றும் ஐம்பது (50) சூரியகல வீதி விளக்குகள் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட அவசியமான பொருத்தபட வேண்டிய இடங்களில் பொருத்தப்படாது பிரதேச சபை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- | விரைவாக பொருத்தி அதை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | பராகிரமபுர பொது மைதானத்தில் 2022 யூலை 13 ஆம் திகதி தொடக்கம் யூலை 23 ஆம் திகதி வரை இடம்பெற்ற ''எசல கலபய'' எனும் பொழுதுபோக்கு நிகழ்வின் போது வழங்கப்பட்ட நுழைவுச்சீட்டின்மீது அறவிடப்பட வேண்டிய பொழுதுபோக்கு வரி அறவிடப்பட்டிருக்கவில்லை. | பொழுதுபோக்கு நிகழ்வின் போது நுழைவுச்சீட்டு வழங்கப்படாமையினால் பொழுதுபோக்கு வரி அறவிடப்பட்டிருக்கவில்லை. | பொழுதுபோக்கு நிகழ்வின் போது கலந்து கொண்டவர்களுக்கு நுழைவுச்சீட்டு வழங்கப்பட்டது ஆகவே வருமானத்தின் அடிப்படையில் பொழுதுபோக்கு வரி அறவிடப்பட வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதேச சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பொருள் கணக்கெடுப்பு சபையின் 2021 ஆம் ஆண்டு அறிக்கையின்படி 05 வாகனங்களுக்கு ஏல விற்பனைக்கான அனுமதி வழங்கப்பட்ட போதிலும் அது நடைமுயைப்படுத்தபடவில்லை. | இயந்திர பொறியியலாளர் வருகை தந்தவுடன் இச் செயற்பாட்டை செய்கின்றேன். | விரைவாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |